---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்பரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கப்பதாக நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிதியமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை.

	குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் உருப்படிகள் மீண்டும் வகைப்படுத்தப்படும் சந்தர்ப்பமொன்றில் நியமத்தின் பிரகாரம் அது தொடர்பான தகவல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். நிர்மாணிக்கப்பட்டு வரும் கேபில் கார் செயற்திட்டத்திற்காக முன்னைய ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 5,372,320 தொகை முன்னைய ஆண்டில் நிதிக் கூற்றுக்களில்	கேபிள் கார் திட்ட ஒப்பந்தத்தின் கீழ் உரித்தல்லாதிருந்ததுடன் படி அது பொறுப்பு நிதியத்தின் 14 சதவீத முதலீடாக இருப்பதால் ம், எனவே நிதிக் கூற்று உருப்படிகள் வகைப்படுத்தலாக சரி செய்யப்பட்டுள்ளதாக.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

முடிவடையாத நிர்மாணமாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகை உட்பட மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 93,680,989 ஆன மொத்த தொகை முதலீடாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது, எனினும் மீண்டும் வகைப்படுத்தப்பட்ட உரிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்க வில்லை.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் செலவினத்தின் கூட்டுத்தொகை ரூபா 2,293,901 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் அது ரூபா 388,916 என ரூபா 1,305,285 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் போது ஆரம்ப சம்பனத்தை அடிப்படையாகக் கொண்ட பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பரீட்சித்து பதிலொன்றை வழங்குமாறு தொழில் திணைக்களத்திடம் கோரி உள்ளதாக.	முறையாக ரீட்சிக்கப்பட்டு சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும்.
(ஆ)	அம்புலுவாவ வளவில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தாபிக்கப்பட்ட கணனி முறைமையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஒவ்வொரு நினைவுச் சின்ன வகையின் பிரகாரம் மொத்தமாக நினைவுச் சின்னங்கள் விற்பனை வருமானம் மற்றும் மாதாந்த பொழிப்பின் பிரகாரம் நினைவுச் சின்ன விற்பனை வருமானத்திற்கு இடையே ரூபா 1,604,777 ஆன இணக்கமின்மை யொன்று காணப்பட்டது.	அதில் இருந்த தவறினை சீராக்கம் செய்துள்ளதாக.	இவ்வாறான நிலைமை ஒன்று ஏற்படாத வகையில் உள்ளக கட்டுப்பாட்டை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் வருமானத்தை இனங்காணும் போது Adventure Park மற்றும் Souvenir Shop வருமானம் ரூபா 116,250 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்கிடல் தவறு ஒன்று காரணமாக முறையே 96,250 20,000 மற்றும் குறைத்து பதிவு செய்யப்பட்டுள்ளதாக.	சரியான பெறுமதியை நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	பைனஸ் செய்கையில் விழுந்திருந்த மரங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்த மரங்களின் 14,744 அடி நீளமான மற்றும் 5,797 சதுர அடி மற்றும் நீளத்தின் அளவு குறிப்பிடப்படாத மரங்களை அறிவதற்காக மொத்தம் ரூபா 1,000,070 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும்	பைனஸ் செய்கையில் இருந்த அகற்றப்பட்டிருந்த மரங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட பலகைகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டு திருத்திய கணக்குகள் கூற்றில் சரி செய்வதாக.	சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கிழிக்கப்பட்ட மரத்திற்காக செலவிடப்பட்ட செலவினத்தில் ரூபா 288,180 தொகையான பெறுமதி மாத்திரம் நிதிக் கூற்றுகளில் இருப்புக்களாக குறிப்பிடப்பட்டு எஞ்சிய ரூபா 711,890 தொகை நாட்டிய பீடத்தின் செலவினமென்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் எஞ்சிக் காணப்பட்ட 7015 அடி நீளமான குற்றிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

	விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிலையான சொத்துக்கள்	483,501,310	நிலையான சொத்துக்கள் பதிவேடு	2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் பதிவேட்டை பதிலுடன் சமர்ப்பிப்பதாகக.	நிலையான சொத்துனக்கள் பதிவேட்டை உரிய படிவத்தின் பிரகாரம் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஆ)	எரிபொருள் இருப்பு மீதி	142,428	இருப்பு அறிக்கைகள்	எரிபொருள் இருப்பினை உறுதிப்படுத்தும் உரிய அறிக்கைகளை சமர்ப்பிபதாக ;	இருப்பு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
(இ)	பெற வேண்டிய வருமானம்	6,944,247	மீதி உறுதிப்படுத்தல்கள்	ரூபா 6,944,247 கடன் பட்டோர் காலப் பகுப்பாய்வை சமர்ப்பிப்பதாக	மீதி உறுதிப்படுத்தல்களை கணகாய்விறகு வழங்க வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஈ)	நிர்மாணங்கள் மற்றும் வழங்கல்கள்	16,196,981	செய்யப்பட்ட வேலை கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் அளவு அளவீட்டு பத்திரம், விகிதம் போன்ற உறுதிப்படுத்தும் பதிவேடுகள்.	கொடுப்பனவிற்காக உறுதிப்படுத்தல் இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதாக.	மீதிகளை உறுதிப் படுத்துவதற்கு சான்று உறுதிச் சீட்டுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

1.6 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 627,119 கூட்டு தொகையான 06 கடன் கொடுத்தோர் மீதிகளைத் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கடன் கொடுத்தோருடன் இணக்கப்பாட்டின் பேரில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	கடன் கொடுத்தோர் மீதிகளை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ உயிரின பல்வகை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 6(2)(1) (ஊ) பிரிவு	பதவியணியினர் மற்றும் அவர்களை ஆட்சேர்ப்பது தொடர்பான விதிகளை அங்கீகரித்துக் கொண்டு முறையான ஒழுங்கமைப்பு கட்டமைப்பொன்றும் முறையான பதவியணி யொன்றை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக	சட்ட நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டத்துக்கு இணங்க செயற்படுவதற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நகர சபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அதிகாரத்தின் 125 ஆம் பிரிவு	அம்புழுவாவ வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் சுற்றுலா விடுதி, சிற்றுண்டிச்சாலை, சமய நிறுவனங்கள், முதியோர் இல்லம் நுழைவு பந்தல், மலசல கூடங்கள், கோபுரங்கள் மற்றும் ஏனைய நிர்மாணங் களுக்காக கம்பளை நகர சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை.	முன் இருந்து வரும் கட்டிடங்களாக இருப்பதுடன் அதற்காக உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக	- மேற்படி -

(இ)	1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் மற்றும் 1980 இல் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம்	மீளாய்வாண்டின் நிதியங்களுக்கு பங்களிப்பு கணிப்பீடு செய்யும் போது ஊழியரின் உழைப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டிய போதிலும் நமக்கு பொறுப்பினால் ஊழியரின் ஆரம்ப சம்பளத்தின் அடிப்படையில் மாத்திரம் பங்களிப்பு கணிப்பீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் பங்களிப்பு ரூபா 1,515,878 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 3,834,574 ஆன சம்பளம் செலுத்திய 32 ஊழியர்களுக்காக நிதியத்தின் பங்களிப்பு செலுத்தப்பட்டிருக்கவில்லை	2024 ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட காலத்திற்கு ஆட் சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்காக EPF/ETF கொடுப்பனவு நடவடிக்கைகள் செய்யப்படாத இருந்ததுடன் நிரந்தர ஊழியர்களுக்காக EPF/ETF கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	- மேற்படி -
(ஈ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
i.	நிதிப் பிரமாணம் 371(2) (அ)	ரூபா 25,000 ஆன கூடியதாக குறிப்பிடப்பட்ட சிறு கட்டுநிதி வழங்கப்படக் கூடியதாக இருந்த போதும் மீளாய்வாண்டில் ரூபா 50,000 முதல் ரூபா 750,000 வரை 65 சந்தர்ப்பங்களில் சிறு கட்டுநிதியாக மூன்று ஊழியர்களுக்கு ரூபா 12,138,389 தொகை விடுவிக்கப்பட்டு இருந்தது அவ்வாறே சிறு காசு கட்டுநிதியிலிருந்து ஒரு தடவையில் ஒரு தேவைப்பாட்டுக்கு செலுத்தக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 5,000 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டில் 161 சந்தர்ப்பங்களில் அதற்கு இணங்காத வகையில் ரூபா 5190 முதல் ரூபா 346,880 வரை மொத்தம் ரூபா 4,308,133 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	ரூபா 500,000 மேற்பட்ட தொகையை மேவுகளை அங்கீகாரத்தின் கீழ் பெற்றுக் கொண்டுள்ளதாக.	நிதிப் பிரமாணங்களின் நியதிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர் களுக்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ii.	நிதி பிரமாணம் 387	காசோலை மூலம் செய்யப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்காக தமது வங்கி மீதி போதுமானதாக உள்ளதா என உத்தியோகத்தரால் எந்நேரமும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் கொடுப்பனவு செய்யப்பட்டதால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை வங்கிக் கணக்கில் ரூபா 525,452 ஆன மேலதிக பற்றொன்று காணப்பட்டது.	காசோலை வழங்கப்பட்டிருந்த போதும் இவ்வாண்டில் வங்கி மேலதிக பற்றி வசதிகள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதாக.	- மேற்படி -
iii.	நிதி பிரமாணம் 396	வழங்கப்பட்ட காசோலைகளில் செல்லுபடிக் காலத்தைத் மிகைத்திருந்த ரூபா 24,200 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	காசோலை பெறுவோர் அறிவுறுத்தப்பட்டு அது தொடர்பாக முறையான நடவடிக்கை என்று எடுப்பதற்கு உள்ளதாக.	நிதி பிரமாணங்களின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(உ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 ஆம் பந்தி	மீளாய்வாண்டில் அம்புலுவாய உயிரின பல்வகைப்படுத்தல் தொகுதியின் நடவடிக்கைகளுக்காக வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வழங்குனர்களை பதிவு செய்யும் பதிவேட்டினை சமர்ப்பிப்பதாக.	பெறுகை வழிகாட்டல் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்குனர் பதிவு செய்யப்பட வேண்டும்
(ஊ)	2009 ஜுன் 09 ஆம் திகதிய DMA/2009 (01); ஆம் இலக்க முகாமைத்துவ கணக்கு ஆய்வு சுற்றறிக்கை.	உள்ளக கணக்காய்வொன்று ஆரம்பம் முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டில் ஆண்டு முதல் உள்ளக கணக்காய்வு ஒன்று ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக.	சுற்றறிக்கை நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	நம்பிக்கை பொறுப்பு கட்டுப்பாட்டு சபையின் 2009 ஒக்தோபர் 02 ஆம் திகதிய கூட்ட அறிக்கை	கூட்ட அறிக்கை தீர்மான இலக்கம் 1 இன் பிரகாரம் ஆண்டுக்காக 12 கட்டுப்பாட்டு சபை கூட்டங்கள் நடத்தப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டில் 6 கூட்டங்கள் மாத்திரம் நலத்தப்பட்டிருந்தன	தேவைபாட்டின் பேரில் மாத்திரம் நம்பிக்கை பொறுப்பு கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக	குறித்துறைக்கப்பட்ட அளவிலான கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

02. நிதி மீளாய்வு

நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 137,693,888 ஆன தேறிய மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 44,632,225 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 93,061,663 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் இந்த அதிகரிப்பிற்கு டிக்கட் சீட்டு வருமானம் அதிகரித்தமை மற்றும் கட்டிட வாடகை வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சாத்தியவள ஆய்வு அறிக்கை, திட்டங்கள் மற்றும் மதிப்பீடு தயாரிக்காமல் தொகுதியில் கல்லால் ஆன புத்தர் சிலையை செதுக்குதல், வாகன நிறுத்துமிடம் 01 மற்றும் இரண்டு நிர்மாணங்கள் மற்றும் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்காக மொத்தம் ரூபா 10,313,917 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் 2022 ஆம் ஆண்டு வரையில் அவற்றின் நிர்மாணங்கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டியன் இறுதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் மீத ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை	பூர்த்தி செய்யப்படாத நிறுமானங்களுக்காக அதிகளவு கிரயம் ஒன்றை செலவிடுவதற்கு நேர்வதால் நிறுவனத்தின் நிதி நிலைமையின் பிரகாரம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் வேலையை ஆரம்பித்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்து இருந்தத்துடன் இந்த அனைத்து நிர்மாணங்களுக்குரிய திட்டங்கள் மதிப்பீட்டு செய்யப்பட்டுள்ளதுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும் என்பதாக.'.	முறைப்படி நடவடிக்கை எடுத்து நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கோல்ப் விளையாட்டரங்கிற்காக முற்பனமாக 2023 ஆம் ஆண்டில் ரூபா 250,000 தொகை ஒன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதி வரையில் விளையாட்டரங்கு நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை மீளாய்வாண்டின் ஏப்ரல் 08 ஆம் திகதி தனபாட முற்பணமாக ரூபா 250,000 தொகை ஒன்று வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் பொருட்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் நிறுவனத்தின் நிதிநிலைமை அடிப்படையில் வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்து உள்ளதாக.	முறைப்படி நடவடிக்கை எடுத்து செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நியமத்தினுடைய SLS சான்றிதழ் உடன் கூடிய முன்கலவை கற்கள் கண்டியைச் சுற்றி உற்பத்தி செய்யப்படும் நிறுவனங்கள் காணப்பட்ட	SLS நியமம் தரம் இருக்கும் முன் கலவைக் கல் எம்மைச்சு சுற்றி இருந்த போதும் N90 சுமை (அதிகளவு பாரம்)	முறையான பரிசோதனை மேற்கொண்டு சிக்கனமற்ற வகையில் செலவிடப்பட்டுள்ள

	போதும் மீளாய்வாண்டில் போது கடுவலையிலிருந்து அம்புலுவா வரை முன் கலவை கற்கள் போக்குவரத்து செய்வதற்காக செய்யப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூபா 320,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	ஈடுபடுத்துவதற்கு பொருத்தம் இல்லை என்பதால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொண்டதாக.	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	இணையதளத்தை நாளதுவரையாக்கு வதற்காக பாதை ஆக்குவதற்காக உன் பேணி செல்வதற்காகவும் ரூபா 880,000 தொகை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கொடுப்பணம் செய்யப்பட்டிருந்த போதும் அந்நிறுவனத்தை தெரிவு செய்யும் அடிப்படை மற்றும் பெறுகை செயற்பாட்டிற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	திறமை மற்றும் எளிமை மற்றும் விலை விபரங்கள் குறைவாக இருந்ததால் விளம்பர நடவடிக்கைகளுக்காக பொறுப்புச் சபையில் அங்கீகாரத்தின் பிரகாரம் அந்நிறுவனத்தை விளம்பர நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதாக.	முறையான பெறுகை நடைமுறையொன்று கீழ் நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 1,459,000 தொகை செலுத்தி RN 125 உழவு இயந்திரம் மற்றும் காடுகளை வெட்டும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் கூறு விலை கடிதங்கள், பெறுகை தீர்மானங்கள், பொருட் கட்டளை மற்றும் பெறுகை குறிப்பு பட்டியல் மற்றும் இருப்பு பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படா திருந்ததுடன் பீ.சி 60 எஸ்கவேட்டர் இயந்திரத்தின் திருத்தத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 736,550 தொகை கொடுப்பனவு செய்யப் பட்டிருந்த போதும் இந்நிறுவனம் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக பெறுகை தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை.	நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட உழவு இயந்திரம் இலங்கையில் விற்பனை செய்யப்படும் ஒரே முகவராக இருந்ததால் அந்நிறுவனத்தில் இருந்து இன்று இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் பணம் கொடுப்பனவின் போது பட்டியல் மற்றும் விலை விபரங்கள் சமர்ப்பிப்பதாக	முறையான பரிசோதனை என்று மேற்கொண்டு முறையற்ற பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	2023 ஜுன் 10 ஆம் திகதி நடைபெற்ற பொறுப்பு சபை கூட்டத்தின் போது ரூபா 1.2 மில்லியன் மதிப்பீட்டின் பிரகாரம் கேபிள் கார் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அது நிர்மாணிக்கப்பட்டு பராமரித்தச் செல்வதற்கு வேராக கம்பெனி ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கும் மதிப்பீட்டுத் தொகையில் 16 சதவீதம் ஒரு பொறுப்பினால் செலவிடுவதற்கு	அம்புலுவாவ உயிரியல் பலவகை தன்மை தொகுதியின் கேபிள் கார் செயற்திட்டத்தின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,201,085,429 ஆக இருந்ததுடன் நிதியத்தினால் முதலீடு செய்யப்பட்ட பகுதி உடன்படிக்கையின் பிரகாரம் 14 சதவீதமாகும். ஆகும் அதில் 2024 ஆம் ஆண்டிற்குரிய தொகை மாத்திரம் தற்போது முதலீடு செய்யப்பட்டுள்ளதாக.	இச்செயற் திட்டம் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்றை நடத்தி முறைப்படி நடவடிக்கை எடுத்த தரப்பினருக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்திட்டத்தினை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகை கோரலின்றி நம்பிக்கை பொறுப்பின் கூட்டம் நடத்தப்பட்டு 06 நாட்களின் பின்னர் அதாவது 2023 ஜுன் 16 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றுடன் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இதற்காக மீளாய்வாண்டில் 19 உறுதிச் சீட்டுக்கள் மூலம் மொத்தம் ரூபா 93,151,217 தொகை செலவிடப் பட்டிருந்ததுடன் அது எந்த செயற்பாட்டுக்கு என்பதை உறுதிப்படுத்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் அட்டவணைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. கேபில் கார் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக ரூபா 250,360,000 ஆன மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு அதில் 37 சதவீத தொகை இதுவரை பொறுப்பினால் செலவிடப்பட்டு இருந்தது.		
(ஆ)	தொகுதியில் அமைந்துள்ள கோபுரத்துக்கு நுழையும் வீதியில் உள்ள வெடிப்பொன்று தொடர்பாக விஞ்ஞான பரிசோதனையொன்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படாமல் ரூபா 75,000 தொகைக்கு சிவில் பொறியியலாளர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு பொறியியலாளரிடமிருந்து பெற்றுக கொண்ட ஆலோசனையின் பிரகாரம் மீண்டும் ரூபா 58,279 செலவிடப்பட்டு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தி டமிருந்து பரீட்சிக்கப்பட்டு இருந்தது அதன் பிரகாரம் முன்னர் செலுத்திய ரூபா 75,000 விளைவற்ற செலவினம் ஒன்றாக இருந்தது.	இந்தக் கொடுப்பனவு கோபுரத்தின் நிலைமை தொடர்பாக பரிசோதனை யொன்றுக்குக்கு அல்லாமல் இருந்த துடன் கோபுரத்துக்கு நுழையும் வீதியில் உள்ள வெடிப்பு தொடர்பாக புவி விஞ்ஞான பரிசோதனை ஒன்றாக இருந்ததுடன் அதிக ஆண்டு அத்திகதி (அண்டு) அசசீட்டின் போதுஇடம் பெற்ற தவறு ஒன்றாகும் என்பதாக	முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு விளைவற்ற செலவினத்தை குறித்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும்
(இ)	நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட சட்டத்தின் நோக்கங்களின் பிரகாரம் இந்த தொகுதி, சமய நிலையங்களைப் பாதுகாத்தல் சமய அபிவிருத்தி மேம்படுத்தல் என்பன நோக்கமாக இனங்காணப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டில் தொகுதியினை அண்மித்து பியர் சாலையொன்று ஆரம்பிக்கப்பட்டதற்காக செலவிடப்பட்டமை நம்பிக்கை	வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் அதிக கேள்வி இதற்காக காணப்பட்டதுடன் பல்வகை தொகுதியின் தனித்துவத்திற்கு பாதிப்பேற்படாத வகையில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாலும் எமது தனித்துவத்தை	சட்டத்தின் நோக்கங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு நோக்கத்திற்கு பாதிப்பு வரும் வகையில் செயற்பட்ட தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பொறுப்பின் நோக்கத்துக்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்க ப்பட்டது	பாதுகாத்து இந்த வசதிகளை சுற்றுலா பிரயாணிகளுக்கு வழங்குவதற்கு எம்மால் நடவடிக்கை எடுத்ததாகவும் தற்போது அந்நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கூட்டிணைக்கப்பட்ட நோக்கங்களில் களியாட்டம் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த முடியும் என்பதாக.	
(ஈ)	2023 ஜனவரி 16 ஆம் திகதி பெறுகை கோரி அதற்கு 07 மாதங்களின் பின்னர் அதாவது 2023 ஆகஸ்ட் 16 ஆம் திகதி கம்பெனி பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த கம்பெனியொன்றுக்கு கணினி முறைமை முகாமை செய்வதற்காக கையளித்து மீளாய்வாண்டில் ரூபா 20,010,057 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	அந்த நிறுவனத்தின் விலை விவரங்களின் பிரகாரம் வருமானத்தில் 7.5 சதவீதத்தை கொடுப்பனவு செய்வதற்கு இணக்கப்பாட்டின் பேரில் பொறுப்பு சபை அங்கீகாரத்துடன் அந்நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக.	சரியான பெறுகை நடைமுறை யில் இருந்து விலகி நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் அம்புலுவாவ தொகுதியில் கடமை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பங்களின் உறுப்பினர்களின் நலன்புரி செலவினமாக ரூபா 633,378 தொகை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது	பொலிஸ் கடமை புரியும் நபர்களின் குடும்பங்களின் அங்கத்தவர்களுக்காக நலன்புரி செலவினத்தை கொடுப்பனவு செய்வதற்காக பொறுப்புச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக.	நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக கொடுப்பனவு செய்யக் கூடாததுடன் அவ்வாறு கொடுப்பளவு தீர்மானம் எடுத்த தரப்பினருக்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2006 பெறுகை வழிகாட்டி கோவை பின்பற்றப்படாமல் 35 சந்தர்ப்பங்களின் போது ரூபா 15,333,458 செலவிடப்பட்டு கொள்வனவுகள் மற்றும் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.	உங்களால் கோரப்பட்ட பெறுகை ஆவணங்கள் பதிலுடன் சமர்ப்பிக்கப்படும் என்பதாக	பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த தரப்பினருக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் சரியாக பெறுகை செயற்பாட்டை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவததின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 51 நாட்கள் தாமதத்துடன் 2025 ஏப்ரல் 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் செயலாற்றல் அறிக்கை அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2024 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2025.04.21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதாகவும் செயலாற்றல் அறிக்கையை பதிலுடன் சமர்ப்பிப்பதாக. .	நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை உரிய காலப்பகுதிக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளடக்கப்பட்ட பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	அறிக்கையை பதிலுடன் சமர்ப்பிப்பதாக.	முறையான பாதீடொன்ற தயாரிக்கப்பட வேண்டும்..